**லாஹுகல பிரதேச சபை**

**அம்பாறை மாவட்டம்**

**-----------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 26 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 08 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 சனவரி 06 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லாஹுகல பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2014 சனவரி 27 ஆந் திகதிய பீஎல்/05/பீடீ/இபொகநி ஆம் இலக்க உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

(அ) ஊழியர்களிடமிருந்து ஊழியர் கடன் கடனை அறவிடும் போது மேலதிகமாக அறவிடப்பட்ட ரூபா 7,775 தொகையொன்று செலுத்த வேண்டியதாக தனியாகக் காண்பிக்கப்படாது ஏனைய ஊழியர்களிடமிருந்து அறவிடவேண்டிய மீதியில் ஈடுசெய்யப்பட்டிருந்தது. அதனால் ஊழியர் கடன் கணக்கின் மீதி ரூபா 7,775 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 94,765 பெறுமதியான காணாமல் போன 1040 நூலகப் புத்தகங்கள் தொடர்பாகவும் பெறுமதி இனங்காணப்படாத தொலைந்துபோன 241 நூலகப் புத்தகங்கள் தொடர்பாகவும் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் அந்தப் பெறுமதியை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிப்பதற்கோ அல்லது சான்றுறுதிப்படுத்துவதற்கோ முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 129,386,496 | நிலையான சொத்துப் பதிவேடு |
| பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 1,552,791 | வருமானப் பதிவேடு |
| வாடகை வருமானம் | 135,000 | |
| ஏனைய வருமானம் | 144,982 | |
| வருமானக் கடன்பட்டோர் | 26,983 | கடன்பட்டோர் பதிவேடு |

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) பிரதேச சபை விதிக் கோவை | |
| (i) விதி 59 – 66 | சபைப் பிரதேசத்தில் மெய்மையாய்வு மேற்கொண்டு கைத்தொழில் வரி அறவிடவேண்டிய கைத்தொழில்களை இனங்காண்பதற்கும் வரி அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி – 203 | 2013 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்விற்காக சபையின் பிரதிநிதியொருவர் நியமிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) விதி – 218 | காணியும் கட்டிடமும் ஒவ்வொரு வருடமும் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், பிரதேச சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 47,976,952 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக வருடாந்தம் பரீடசிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நிதிப்பிரமாணம் 880 | பணம், களஞ்சியம் மற்றும் வருமானங்களைச் சேகரிக்கும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,142,861 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 950,056 ஆக இருந்தது. ஆதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 2,092,917 அதிகரிப்பைக் காண்பித்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

--------------------------------------------------------------

பின்வரும் முகாமைத்துவ செயற்திறனின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) லாஹுகல நூலகத்திலும் பானம நூலகத்திலும் 1281 புத்தகங்களின் எண்ணிக்கை தொலைந்து போயிருந்ததுடன் அந்த புத்தகங்களில் பெறுமதி இனங்காணக்கூடிய 1040 புத்தகங்களின் பெறுமதி ரூபா 94,765 ஆகும். இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் இது வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 10 வருடங்களுக்கு முன்பிலிருந்து அகற்றுவதற்கு பொருள் மெய்மையாய்வுக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட 933 புத்தகங்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) தொலைத்தொடர்பு கோபுரங்களிலிருந்தும் விளம்பரப் பதாதைகளிலிருந்தும் வருமானத்தைச் சேகரிப்பதற்காக தேவையான உப விதிகளை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையினால் பயன்படுத்தப்படுகின்ற நன்கொடையாகக் கிடைத்த 02 கெப் வண்டிகள், 04 உழவு இயந்திரங்கள், 05 டேலர்கள் மற்றும் தண்ணீர் பவுசர் என்பவற்றை சபையின் பெயரில் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையின் தண்ணீர் பவுசறை பழுதுபார்ப்பதற்கு சில வருடங்களுக்கு முன்னர் கராஜ் ஒன்றிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் பவுசர் இதுவரை பெறப்பட்டிராததுடன் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்குப்பட்டிருக்கவில்லை.

## 3.2 விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) கெப்வண்டியொன்று, 04 உழவு இயந்திரம், 04 டேலர்கள் துவிச்சக்கர வண்டியொன்று, ஒரு கைரெக்ரர், சீ கெட் படகு, யமஹா எந்திரம் மற்றும் 02 கொங்கிரீட் கலவை என்பன உடைந்த நிலையில் காணப்பட்டதுடன் அவைகளைப் பழுதுபார்ப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டுள்ள ஹுலன்னுகே நூலகத்தின் புத்தகங்கள் பாவனைக்கு எடுக்கப்படாது அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

## 3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பிரதேச விஷேட முன்மொழிவுகள் - 2013 இன் கீழ் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக 107 கழிவுப்பொருள் பாத்திரங்கள் ஒன்று ரூபா 1,868 இற்கு 2013 செப்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2014 மே 07 ஆந் திகதி வரையிலும் அலுவலக வளவில் அந்த கழிவுப் பொருள் பாத்திரங்களில் ரூபா 97,115 பெறுமதியான 52 பாத்திரங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

(இ) நூலகப் புத்தகங்களின் கட்டுப்பாடு

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு